# ஒட்டன்சத்திரம் நகராட்சி

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 83 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.28.06.2019–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள். 20.09.2019 (வெள்ளிக் கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 20.09.2019

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் : 1**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் கடந்த மூன்றாண்டு தமிழக அரசின் திட்டப்பணிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் பரிந்துரை கடித ந.க.எண்.183/செமதொ/2019 நாள்.15.07.2019 மற்றும் 22.07.2019–ன் பேரில் கீழ்க்காணும் தினசரி நாளிதழ்களின் 08/2019 மாத இதழ்களில் வெளியீடு செய்தமைக்காக, மேற்படி நாளிதழ் நிறுவனங்கள் மூலம் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற பட்டியல் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மாலை மலர் (தொழில் மலர்) | 16800/– |
| 2 | மாலை முரசு (தொழில் மலர்) | 10500/– |
| 3 | தமிழ் சுடர் (ESS ESS Publication) | 9250/– |

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி விளம்பர செலவின தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிடவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 246**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 2**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.17349/2019/இ3 நாள்.03.09.2019–ன்படி இந்நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–2020 ன் கீழ் (TURIP) ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் அமைக்கும் பணிக்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்ட மான்ய நிதி | – | ரூ.105.00 |
| 2. மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மான்ய நிதி/ நில அபிவிருத்தி கட்டணம் | – | ரூ.135.00 |
| 3. நகராட்சி பங்களிப்புத் தொகை | – | ரூ.60.00 |
| | | ரூ.300.00 |

மேற்காணும் திட்ட மான்ய நிதி மற்றும் இந்நகராட்சி பங்களிப்பு நிதி (240.00 இலட்சம் + 60.00 இலட்சம்) சேர்த்து ஆகமொத்தம் ரூ.300.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டினை ஏற்று கீழ்காணும் பகுதிகளில் சாலைப் பணிகள் மேற்கொள்ள பணிகள் தேர்வு செய்தது தனி அலுவலரின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்</th><th>சிப்பம் எண்</th><th>வார்டு எண்</th><th>பணிகள் மேற்கொள்ளும் இடம்</th><th>சாலையின் வகை</th><th>மதிப்பீட்டுக் தொகை ரூ. லட்சத்தில்</th></tr>
<tr><td>1</td><td>1</td><td>8 மற்றும் 12</td><td>திண்டுக்கல் பழனி மெயின் சாலை முதல் தும்மிச்சம்பட்டி புதூர் தோட்டத்துச்சாளை வரை</td><td>தார்சாலை</td><td>200.00</td></tr>
<tr><td rowspan="3">2</td><td rowspan="3">2</td><td>3</td><td>கருவூல காலனி</td><td rowspan="3">தார்சாலை</td><td rowspan="3">100.00</td></tr>
<tr><td>4</td><td>சம்சுதீன் காலனி</td></tr>
<tr><td>7</td><td>வினோபா நகர்</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>மொத்தம்</td><td></td><td>300.00</td></tr>
</table>

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் திட்டப் பணியில் மான்யமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.2.40 கோடியுடன் இந்நகராட்சி பங்களிப்புத் தொகையான ரூ. 0.60 கோடியினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஈடு செய்து பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 247**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 3**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதாரம் TN 57 AW 2197, TN 57 AW 5524, TN 57 R 4390 and TN57 R 2362 ஆகிய வாகனங்களுக்கு பேட்டரிகள் பழுதாகியுள்ளது. மேலும் வாகனத்தை இயக்க முடியாத நிலையுள்ளதால், மேற்டி வாகனங்களுக்கு புதியதாக பேட்டரிகள் வாங்கி பொருத்தும் பணி மேற்கொள்ள 16.09.2019 விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு

| வ. எண் | பொருள்கள் விபரம் | எண்ணம் | KV Power System, Dharapuram | Sri Saravana Auto Electrical works, Oddanchatram |
|---|---|---|---|---|
| 1 | SK 1080 – 80R Battery | 2 | 12800/- | 13000/- |
| 2 | SK 1080 – 100R Battery | 2 | 16600/- | 17000/- |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் KV Power System, Dharapuram நிறுவத்தின் விலைப்புள்ளி குறைவாக வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்
2. பொது சுகாதாரம் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ள அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 248**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 4**

மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 3002/2019/அ5 நாள்.28.08.2019 –ன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் – 2019–2020ம் நிதியின் கீழ் க.ரெ.அரசு மேல்நிலைப் பள்ளியில் வடக்குப் பகுதியில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி மேற்கொள்ளும் பணிக்கு ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளுக்காக 18.09.2019–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. பி.வேலுச்சாமி | 0.13 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | ஹச்.எம்.ஆர்.கன்ஸ்ட்ரக்சன் | 2.04% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்துபுள்ளிகளில் வரிசை எண். 1–ல் உள்ள ஒப்பந்ததாரரிடம் இருந்து மட்டும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி ஒப்பந்ததாரர் திரு. பி.வேலுச்சாமி என்பவர் 0.13% மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு. பி.வேலுச்சாமி என்பவரின் 0.13 மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அனுமதிக்கலாம். (ந.க.எண்.1068/2019/இ1)

**தீர்மான எண். 249**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 5**

மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 3002/2019/அ5 நாள்.28.08.2019 –ன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் – 2019–2020ம் நிதியின் கீழ் க.ரெ.அரசு மேல்நிலைப் பள்ளியில் மேற்குப் பகுதியில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி மேற்கொள்ளும் பணிக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளுக்காக 18.09.2019–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. பி.வேலுச்சாமி | 0.13 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | ஹச்.எம்.ஆர்.கன்ஸ்ட்ரக்சன் | 2.04% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்துபுள்ளிகளில் வரிசை எண். 1–ல் உள்ள ஒப்பந்ததாரரிடம் இருந்து மட்டும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி ஒப்பந்ததாரர் திரு. பி.வேலுச்சாமி என்பவர் 0.13% மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு. பி.வேலுச்சாமி என்பவரின் 0.13 மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அனுமதிக்கலாம். (ந.க.எண். /2019/இ1)

**தீர்மான எண். 250**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 6**

மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 3002/2019/அ5 நாள்.28.08.2019 –ன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் – 2019–2020ம் நிதியின் கீழ் 7 வது வார்டு விஸ்வநாத நகரில் கலையரங்கம் கட்டும் பணி மேற்கொள்ளும் பணிக்கு ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளுக்காக 18.09.2019–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. பி.வேலுச்சாமி | 0.10 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | ஹச்.எம்.ஆர்.கன்ஸ்ட்ரக்சன் | 1.46% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்துபுள்ளிகளில் வரிசை எண். 1–ல் உள்ள ஒப்பந்ததாரரிடம் இருந்து மட்டும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி ஒப்பந்ததாரர் திரு. பி.வேலுச்சாமி என்பவர் 0.10% மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு. பி.வேலுச்சாமி என்பவரின் 0.10 மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அனுமதிக்கலாம். (ந.க.எண். /2019/இ1)

**தீர்மான எண். 251**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 7**

ஒட்டன்சத்திரம் நகராட்சி மக்கள் குறைதீர்க்கும் நாள் சிறப்பு முகாமில் கொடுக்கப்பட்டுள்ள மனுவின் அடிப்படையில் வார்டு எண்.3 மேற்கு பக்கம் வடிகால் மராமத்தும் வேடசந்தூர் சாலை கிழக்கு பக்கம் மழைநீர் வடிகால் கட்டுதல் வார்டு எண்.4 சம்சுதீன் காலனி மெயின் சாலை வடிகால் ( சேக் அப்துல் காதன் வீடு அருகில்) வார்டு எண்.5 நாகம்மாள் கோவில் கிழக்கு குறுக்கு பாலம் வடிகால் அமைத்தல் மற்றும் வார்டு எண்.3 கருவூல காலனிக்கு காவிரி குடிநீர் மேல்நிலைத் தொட்டி ஏற்ற பைப்லைன் அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.8.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி பொதுமக்களின் நலன் கருதி, ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 252**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 8**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட இடங்களில் உள்ள பயனற்ற ஆழ்துளை கிணறுகளில் மழைநீர் சேகரிப்பு ஏற்படுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | இடத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | 1 | நாகணம்பட்டி பொதுக்கழிப்பிடம் அருகில் |
| 2 | 1 | நாகணம்பட்டி பைப்பாஸ் சாலை எம்.எஸ்.கே சர்வீஸ் டேசன் அருகில் |
| 3 | 2 | இரளகுடும்பன்பட்டி பைப்பாஸ் சாலை விநாயகர் கோவில் அருகில் |
| 4 | 3 | அங்கு நகர் (தானியங்கும் குடிநீர் இயந்திரம் அருகில்) |
| 5 | 4 | திண்டுக்கல் சாலை டி.எம்.டி பஸ் டிப்போ அருகில் |
| 6 | 7 | விஸ்வநாத நகர் (30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டி அருகில்) |
| 7 | 3 | வேடசந்தூர் சாலை (பெட்ரோல் பங்க் அருகில்) |
| 8 | 8 | பழனி சாலை அண்ணப்பூர்ணா ஹோட்டல் அருகில் |
| 9 | 11 | மேட்டுப்பட்டி விநாயகர் கோவில் அருகில் |
| 10 | 12 | நாயக்கனூர் ஓடை அருகில் |
| 11 | 13 | வர்த்தகர் நகர் |
| 12 | 17 | பழனிக்கவுண்டன் புதூர் ரவி வீடு அருகில் |
| 13 | 17 | மின்மயானம் சாலை |

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி பொதுமக்களின் நலன் கருதி, ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 253**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 9**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட பூங்கா இடங்கள், நகராட்சி அலுவலக கட்டிடங்கள் மற்றும் வடிகால் பகுதியில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | இடத்தின் பெயர் |
|---|---|---|
| | பூங்காக்கள் | |
| 1 | 1 | நாகணம்பட்டி எம்.சி.சி சென்டர் |
| 2 | 8 | கைராசி நகர் |
| 3 | 8 | நல்லாகவுண்டன் நகர் |
| 4 | 12 | கஸ்தூரி நகர் மேற்கு பூங்கா |
| 5 | 12 | கஸ்தூரி நகர் மேற்கு பூங்கா |
| 6 | 18 | குறிஞ்சி நகர் |
| 7 | 1 | ஆர்.எஸ்.பி நகர் மேற்கு |
| | நகராட்சி அலுவலக கட்டிடங்கள் | |
| 1 | 8 | பேருந்து நிலையம் மற்றும் எரிவாயு தகன நிலையம் |
| 2 | 8 | ஆணையாளர் மற்றும் பொறியாளர் குடியிருப்பு |
| 3 | 4 | சொசைட்டி காலனி நூலக கட்டிடம் |
| | வடிகால் பகுதி | |
| 1 | 2 | ஏ.பி காலனி வடக்கு பகுதி |
| 2 | 3 | வேடசந்தூர் சாலை கிழக்கு |
| 3 | 6 | சாஸ்தா நகர் ஐயப்பன் கோவில் அருகில் |

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி பொதுமக்களின் நலன் கருதி, ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 254**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 10**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 10–வது வார்டு தாராபுரம் சாலை கிழக்கு புல எண்.215/1ஏ1ஏ நகர் ஊரமைப்பு இணை இயக்குர், மதுரை அவர்களால், 3 ஏக்கர் பரப்பளவில் ம.ம. (மு)/ந.ஊ.துறை.இ(ம.ம)எண்.54/2018–என எண்ணிடப்பட்டு, மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டதில் 314.20ச.மீ இடத்தை பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பூங்கா இடத்தினை அதன் உரிமையாளர் திரு.ஜெ.பாஸ்கர் மற்றும் இருவர் ஆகியோர்களால், ஒட்டன்சத்திரம் சார் பதிவாக ஆவண எண்.88/2019–ன்படி, ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு பூங்கா பராமரிப்பாக ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவு பூங்கா பராமரிப்பிற்கு பூங்கா இடத்தில் திரு.கே.திருப்பதி ஸ்ரீ கிருஷ்ணா எஜிக்கேசனல் அன்டு சேரிடபுள் டிரஸ்ட், திருவள்ளுவர் சாலை, ஒட்டன்சத்திரம் மூலம் மேற்படி பூங்காவில் ஸ்ரீ கிருஷ்ணா மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி, மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் பராமரிக்க கேட்டு வரப்பெற்ற விண்ணப்பம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. நகர் அமைப்பு ஆய்வர் பரிந்துரையின்படியும், பரிந்துரையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனையின் பேரில் வழங்க மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மான எண். 255**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 11**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் விளம்பரம் / விளம்பர பலகைகள் நிறுவ முறைப்படுத்தி அனுமதி வழங்குவது குறித்து மாண்புமிகு உயர்நீதிமன்ற வழக்கு இடைக்கால தீர்ப்பாணை நாள்.10.12.2018 (WP.No.18345, 18353 and 18366/2018)–ன்படி, செயல்படுத்தும் பொருட்டு, வெளியிடப்பட்ட அரசாணை (4D) எண்.2 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(MC-1) நாள்.05.06.2018–ல் நீதிமன்ற தீர்ப்புரையின்படி, தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (5–வது திருத்தம்) 2018(தமிழ்நாடு சட்டம் 40/2018) நாள்.16.07.2018, அரசாணை எண்.15 மற்றும் 17, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(MC-1) நாள்.30.01.2019, அரசு கடிதம் எண்.20090/MC-1/2018, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.05.02.2019–ன்படி, விளம்பர பலகைகள் அனுமதித்தல், வரி விதித்தல் மற்றும் வரி வசூலித்தல் விதிகள் 2003–க்கான சட்ட திருத்தங்கள் வெளியிடப்பட்டு, அரசிதழில் 31.01.2019 பாகம்–3 பிரிவு 1ஏ–ல் பிரசுர வெளியீடு செய்யப்பட்டதை தொடர்ந்து, மேற்படி நீதிமன்ற தீர்ப்புரை மற்றும் அரசாணையின்படி, இந்நகராட்சி பகுதிகளில் விளம்பர பலகை மற்றும் விளம்பரங்களுக்கான வரி நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 256**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 12**

மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நாள்.16.09.2019–ல் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதிகளில் பருவமழை முன் எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கழிவு நீர் செல்லும் கால்வாய்களிலும், சிறு பாலங்களின் இருபுறமும் அடைப்பு ஏற்படாதவாறு சுத்தம் செய்தல் நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றியும், வரத்து வாய்க்கால்களை தூர்வாருதல். குளம், வாய்க்கால் திறந்த வெளி கிணறு ஆகிய நீர்நிலைகளை நகராட்சி கட்டுப்பாட்டின் கீழ் பார்த்துக்கொள்ளுதல் இவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை கண்காணிப்பதோடு அவற்றிற்கான நீர்வழி தடங்களை சரி செய்வதோடு அவற்றில் ஏற்படும் உடைப்புகளை மணல் மூடைகளை அடுக்கி உடைப்பினை சரிசெய்தல் மேலும் சாலைகளில் உள்ள மரங்கள் மற்றும் மின் கம்பங்கள் ஏதேனும் சாய்ந்து சாலை வழிப்பாதை செல்ல முடியாமல் இருந்தால் அதனை சரி செய்தல் முதலான முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து நகர் பகுதியில் பருவமழை காலங்களில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி பகுதியில் உள்ள நீர் வழித்தடங்கள் ஓடைகள் பாலங்கள் மற்றும் வடிகால்கள் தூர்வாறும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் பரிந்துரைக்கப்பட்ட உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம்அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 257**

அனுமதிக்கப்பட்டது.

இடம். ஒட்டன்சத்திரம்.
நாள். 20.09.2019

தனிஅலுவலர்
மற்றும் ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி.